# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2018 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, குடியியல் வான்செலவு (திருத்தச்) சட்டம்*

---

*(2018 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2018, மே மாதம் 25 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *8.00*** **தபாற் செலவு : ரூபா *10.00***

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## 2018 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, குடியியல் வான்செலவு (திருத்தச்) சட்டம்

[2018 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ-ஓ. 7/2017

## 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, குடியியல் வான்செலவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தில் 18அ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்.

**2.** இரண்டாயிரத்துப்பத்தாம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தின் 18 ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 18அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"வானூர்தி நிலையத்தினுள் சோலிநாடுகைத் தவறு.

18அ. (1) வானூர்தி நிலைய வளவினுளிருப்பதற்கு உரியவாறு அதிகாரமளிக்கப்படாது அங்கிருந்து, உள்வருகின்ற அல்லது வெளிச் செல்கின்ற பயணிகளின் சோலிநாடுவதாக, 6 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட சேவை வழங்குநரின் வான்செலவுப் பாதுகாப்புச் சேவைகளை வழங்குகின்ற ஓர் ஊழியரால் அல்லது கடமையிலுள்ள ஒரு பொலிசு அலுவலரால் காணப்படுகின்ற ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் ; அத்துடன் அவர், விடயத்திற்கேற்றவாறு பொலிசு அலுவலரினால் கைதுசெய்யப்படலாம் அல்லது சேவை வழங்குநரின் வான்செலவு பாதுகாப்புச் சேவைகளை வழங்கும் ஊழியரால் கைப்பற்றப்பட்டு பொலிசு அலுவலரிடம் கையளிக்கப்படலாம் :

2-PL 010704-977 (2018/04)

ஆயின், எவ்வாறாயினும், எவரேனும் உள்வருகின்ற அல்லது வெளிச்செல்கின்ற பயணிக்கு அத்தகைய பயணியின் எவரேனும் குடும்ப உறுப்பினரால் அல்லது நண்பரால் அல்லது சேவை வழங்குநரால் அதன்சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட பிரயாணி உதவியாளர் ஒருவரினால் அல்லது விருந்தோம்பல் தொழிலின் பிரதிநிதி அல்லது முகவரினால் போக்குவரத்தை, தங்குமிடத்தை ஒழுங்கு செய்தல் அல்லது வாகனத்துள் அல்லது வாகனத்திலிருந்து ஏதேனும் பொதிகளை அல்லது வேறு பொருட்களை ஏற்றுதல் அல்லது இறக்குதல் போன்ற ஏதேனும் சேவை வழங்கப்படுதலானது தவறொன்றாக அமைவதாதலாகாது.

(2) ஒராம் உட்பிரிவினைப் பின்பற்றி பொலிசு அலுவலரினால் கைதுசெய்யப்பட்ட அல்லது கைப்பற்றப்பட்டு பொலிசாருக்கு கையளிக்கப்பட்ட ஆள் ஒவ்வொருவரும் எந்த இடத்தில் தவறு புரியப்பட்டிருந்ததாக சார்த்தப்பட்டதோ அந்த இடத்தின்மீது நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ள நீதிவான் முன்னர் செயல்முறைக்கு உகந்தவரை விரைவாக பொலிசு அலுவலரினால் கொண்டுவரப்படுதல் வேண்டும்.

(3) நூற்றியேழாம் பிரிவின் (2) ஆம் மற்றும் (3)ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், இப்பிரிவின்கீழ் எவரேனும் ஆளுக்கெதிராக ஏதேனும் தவறுக்காக குற்றவழக்குத் தொடங்கப்பட லாம் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அவர் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறுமாதங்களை விஞ்சாத மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப் பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கத்துக்காக,-

"விருந்தோம்பல் தொழில்" என்பது, சுற்றுலாப்பயணத் தொழில் தொடர்பான அல்லது இடைநேர் விளைவான ஏதேனும் வியாபாரச் செயற்பாடு அல்லது சேவை எனப் பொருள்படும்; அத்துடன்

"சோலிநாடுகை" என்பது, பின்வருமாறு செய்வதற்கு உரியவாறு அதிகாரமளிக்கப்படாமல், உள்வருகின்ற அல்லது வெளிச்செல்லுகின்ற பயணிக்காக போக்குவரத்தை அல்லது தங்குமிடத்தை ஒழுங்குபடுத்தும் நோக்குடன் அல்லது வாகனத்தினுள் அல்லது வாகனத்திலிருந்து அவரது பொதியை அல்லது வேறு பொருட்களை ஏற்றும் அல்லது தரையிறக்கும் நோக்குடன் அல்லது பெறுமதி வாய்ந்த பிரதிபயனுக்காகவோ அல்லது மற்றப்படிக்கோ ஏதேனும் அதையொத்த சேவையை முன்வைக்கும் நோக்குடன் எடுத்துமொழிதல் எனப் பொருள்படும்.".

**3**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை “பிரகாசன பியச”, அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*